Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை யோசுவா 1:5.

Vol. 71 கர்த்தருடைய சத்தம் பெண்மான்களை ஈனும்படி செய்து, காடுகளை வெளியாக்கும்; சங்.29:9 செப்டம்பர் 2025 No.9

தேவனுடைய வார்த்தை – ஒரு தனிப்பட்ட நன்கொடை

A Very Personal Gift

Rich Carmichael

வருகையின் தூதன் பத்திரிகையை நான் படித்த போது மேரி மான்சன் தனது கடினமான அனுபவங்களில் ஏசாயா 41:10 எவ்வாறு பயனுள்ள தாயிருந்தது என்பதைப் பகிர்ந்து கொண்டதை வாசித்தேன். "பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி, உனக்கு சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்" ஏசா.41:10. சமீபத்தில் கர்த்தர் இந்த வசனத்தால் என்னை மிகவும் ஆசீர்வதித்தார். அந்த வேளை எனக்கு அதிக நெருக்கடியாயிருந்தது. நாங்கள் சேர்ந்து வேதத்தை தியானித்துக் கொண்டிருந்த போது ஒரு சகோதரர் இந்த வசனத்தினை வாசித்தார். அது கர்த்தர் என்னிடம் பேசியது போல நேரடியாக எனது இருதயத்திற்குள் சென்றது. கர்த்தர் என் இருதயத்தை மிகப் பெரிய நம்பிக்கையாலும், ஆதரவாலும், சமாதானத்தாலும் நிரப்பினார். அப்போது தேவன் என்னோடு இருப்பதையும் அவர் என்னைப் பலப்படுத்தி உதவி செய்து நிலை நிறுத்துவார் என்பதையும் உறுதியாக்கிக் கொண்டேன். அந்த வேளையில் மட்டுமல்ல அந்த வசனத்தால் வருங் காலங்களிலும் அவர் என்னை ஆசீர்வதிப்பார், தேவனுக்கே மகிமை உண்டாவதாக. அவர் நமக்கும் தமது ஊழியக் காரர் அனைவருக்கும் தமது வார்த்தைகளால் நெருங்கி வருகிறார்.

கர்த்தருக்கான ஒரு தனிப்பட்ட காரியம்

இவ்விதமான ஒரு ஊழியம் கர்த்தரால் ஏற்பட்டது. எனவே வசனம் தேவனுக்கு தனிப்பட்ட காரியம். வசனம் தேவனுடையது. அது அவருடைய வாயிலிருந்து புறப்பட்டு அவரது திட்டத்தை நிறைவேற்றும் ஏசா.55:11. அதன் மூலம் அவர் தம்மையும் தமது குணாதிசயங்களையும், தமது வழிகளையும் நோக்கங்களையும், திட்டங்களையும், வாக்குறுதிகளையும் வெளிப்படுத்துகிறார். கூடுதலாக அவர் வசனத்தின் மூலம் தம்மையே கொடுக்கிறார். ஆன்ட்ரூ முர்ரே கூறுவதின்படி "தேவன் பேசும் போது தமது வார்த்தைகளில் தம்மையே கொடுப்பதோடு அவரது அன்பு, ஜீவன், சித்தம், எல்லா வற்றையும் அவரது வார்த்தைகளை ஏற்றுக் கொள்கிற வர்களுக்கு அளிக்கிறார்". இதுவே தேவனுடைய வார்த்தை நமக்கு விலையேறப் பெற்ற தாயிருக்கக் காரணமாயிருக்கிறது. அவரது வார்த்தை மூலம் அவர் தம்மையே பகிர்ந்து கொள்வதோடு, தமது இருதயத்திலுள்ள யாவற்றையும் கூட பகிர்ந்து கொள்கிறார். அவரது பேராவல் என்னவெனில் வசனத்தின் மூலம் நாம் இன்னும் அவரை நன்றாக அறிந்து அவரோடுள்ள உறவில் வளர வேண்டும் என்பதே.

மேலும் அவர் நம் ஒவ்வொரு வரையும் தனிப்பட்ட முறையில் சந்தித்து நமது தேவைகளை வசனத்தின் மூலம் சந்திக்க விரும்புகிறார். அவர் நம்மை அன்பாக நேசிக்கிறார். அவரது வார்த்தையால் நம்மை பலப்படுத்துகிறார் சங்.119:28. நமது விசுவாசத்தைக் கட்டுகிறார் யோவா. 20:31, ரோமர் 10:17. கழுகி சுத்தகரிக்கிறார் சங்.119:9, யோவா.17:17, எபே.5:26. நம்மை விடுதலை பண்ணுகிறார் யோவா. 8:31-32. வளரச் செய்கிறார் 1பேது.2:2. உபதேசித்து, கடிந்து கொண்டு, சீர்திருத்தி, நீதியைப் படிப்பிக்கிறது. பாவத்தை மேற்கொள்ளவும் (சங். 119:11), ஆலோசனை தரவும் (119:24), ஆறுதலும் நம்பிக்கையும் தரவும் (ரோமர் 15:4), குணமாக்கவும், விடுவிக்கவும்(சங்.107:20) இரட்சிப்பின் நம்பிக்கையை தரவும் (1யோ.5:13), ஆவிக்குரிய போராட்டத்திற்கு நம்மைத்தரிப்பிக்கவும் (எபே.6:17), நன்மை தீமையைப் பிரித்தறிய உதவி செய்யவும் (எபி.5:14) எச்சரிக்கவும் (சங்.19:11, 1கொரி.10:11), பிரகாசிப்பித்து, திசை காட்டி வழிநடத்தவும் (சங்.119:105), சந்தோஷத்தால் நம்மை நிரப்பவும் (19:18), புரிந்து கொள்ளுதலைத் தரவும் (119:169), வாழ்க்கைப் புயலில் சகிப்பதற்கான உறுதியான அஸ்திபாரத்தைத் தரவும் (மத்.7:24-25) இன்னும் பல நன்மைகளுக்கும் ஏதுவாயிருக்கிறது.

நமக்கு தேவனுடைய வார்த்தை எவ்வளவு விலையேறப் பெற்ற ஈவாக இருக்கிறது! இதனால்தான் சங்கீதக் காரன்: "மிகுந்த கொள்ளையுடைமையைக் கண்டு பிடிக்கிறவன் மகிழுகிறது போல, நான் உமது வார்த்தையின் பேரில் மகிழுகிறேன்" (சங்.119:162) என்று பாடுகிறார்.

நமது தனிப்பட்ட பிரதிவினை

இத்தகைய விலையேறப்பெற்ற தனிப்பட்ட ஈவினை கர்த்தர் தந்தபடியால் நமது தனிப்பட்ட பிரதிவினையையும் அவர் எதிர்பார்க்கிறார். நாம் நமது முழுமனதோடும், இருதயத்தோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும் அவரில் அன்பு கூருவது அவரது எதிர்பார்ப்பு (உபா.6:5-6). அவரது வார்த்தைக்கு நம்மை முழுவதுமாக அர்ப்பணிக்க வேண்டும். அதற்காக அதை வாசித்து, படித்து, தியானித்து அதோடு மனப் பாடம் செய்வதும், கீழ்ப்படிந்து, அதிலிருந்தே ஜெபிப்பதும் மற்றவர் களோடு அதைப் பகிர்ந்து கொள்வதும் நலமானது. நல்ல இருதயத்தோடு அதை ஏற்றுக் கொள்வதும் கவனச் சிதறல்களி லிருந்து விடுபடவும் நல்ல கனி கொடுக் கவும் அவர் எதிர்பார்க்கிறார் லூக்.8:14-15.

அவர் கீழ்க் குறிப்பிடும் கேள்விகளைக் கேட்டுவிட்டு, ஒரு அழைப்பையும் கொடுக்கிறார். "நீங்கள் அப்பமல்லாததற்காக பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவி கொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். உங்கள் செவியைச் சாய்த்து என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்" ஏசா.55:2,3. எத்தனை அழகிய அழைப்பு! "**எனக்குக் கவனமாகச் செவிகொடுங்கள்**", "**என்னிடம் வாருங்கள்**", இது எவ்வளவு தனித்துவமானது. கர்ததர் நம்மோடு பகிர்ந்து கொள்ள ஏராளமான வார்த்தைகளை வைத்திருக்கிறார்! அவரைப்பற்றி பகிரவும் நம்மூலமாகவும் நம்மிலும் அனேக காரியங்களைச் செய்ய விரும்பு கிறார். நாம் தனித்துவத்தோடு அவருக்கு பதில் சொல்லுவோமா? அவருடைய வார்த்தைகளில் அவரை நாம் சந்தித்து அவை நம்மில் ஆழமாகக் கிரியை செய்ய அவர் விரும்புகிறபடியே நாம் நடந்து கொள்வோமா?

இந்த இதழைக் குறித்து

மேற்கூறியவற்றை மனதில் கொண்டு **வருகையின் தூதன்** ஊழியர்கள் வேத வசனங்களுக்காக நன்றியுள்ளவர் களாகவும், வாசகர்களுடைய நன்மைக் காகவும், தேவ வசனத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தியிருக்கிறார்கள். இந்த இதழ் நீங்கள் வேதவசனத்தை வாசித்து தியானிக்க உதவி செய்வதாக. **வசனம் ஜீவனுள்ளதும் வல்லமையுள்ளதுமாயிருக்கிறது** எபி.4:12. இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும் போது ஆழமாகக் கிரியை செய்யக் கூடியது.

இதோடு உத்தமமான விடாப் பிடியான ஜெபத்தையும் விட்டுவிடா திருங்கள். தேவ ஜனங்கள் வேத வசனத்தின் மூலமாகவும் ஜெபத்தின் மூலமாகவும் அவரைக் கிட்டிச் சேரும் போது அவரும் அவர்களைக் கிட்டிச் சேருவார். தனியாகவும் குழுவாகவும் வேத வசனத்தை வாசித்து ஜெபிப்போம். அவருக்கு உத்தமமாய் வாழ்ந்து, அவரது வாழ்வும் வலிமையும் நம்மிலிருந்து வெளிப்படச் செய்வோம்.

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955 - 1999)

Advisory Board : D. Stanly Jones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P. Mony

2025 எழுப்புதலுக்காக ஜெபிக்கும் ஆண்டு

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? சங்.85:6.

Wilt thou not revive us again; that thy people may rejoice in thee? Ps.85:6.

நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால் நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப் பண்ணேன்; **நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்** என்றார் யாத்திராகமம் 15:26.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2025 செப்டம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.

ஜெபக்குறிப்பு 5. ***உறவினர்களுக்காக***

வருகையின் தூதன் வாசகரைக் குறித்த ஒரு பாரம் எனக்கு ஏற்பட்டதினால், **பெப்ரவரி** மாதம் இரட்சிப்பு என்றால் என்ன? என்றும், **மார்ச்** மாதம் இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர் தானோ? என்ற தலைப்பிலும் தலையங்கம் எழுதி னேன். இப்போதும் அந்த பாரம் எனக்குள் இருப்பதினால், தினமும் உங்களுக்காக, உங்கள் குடும்ப அங்கத்தினருக்காக ஜெபிக்கிறேன்.

தேவன் நோவாவை நோக்கி: "**ஆனாலும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்; நீயும், உன்னோடே கூட உன் குமாரரும், உன் மனைவியும், உன் குமாரரின் மனைவிகளும், பேழைக்குள் பிரவேசியுங்கள்**" என்றார் ஆதி.6:18.

நம்முடைய குடும்பங்களில் கணவன், மனைவி, பிள்ளைகள் எல்லாரும் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா?

உங்கள் குடும்பத்தில், உறவினர்களில் யாராவது இது வரைக்கும் ஆண்டவராகிய இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவர்களுக்காக வேதனையோடு வேண்டிக்கொள்ளுங்கள்.

அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்து பேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு,

நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான் லூக்கா 16:27,28.

அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச் சொல்லி, உள்ளே ஓடி, நடுநடுங்கி பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து,

அவர்களை வெளியே அழைத்து வந்து: ஆண்டவ மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்றான்.

அதற்கு அவர்கள் கர்த்தராகிய **இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்** என்று சொல்லி,

வருகையின் தூதன்
ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்.

மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக் கொண்டு போய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான், அவனும் அவனுடையவர்கள் **அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்** அப். 16:29-33.

திறப்பிலே நின்ற பினெகாஸ்

கர்த்தருடைய கிருபையால் செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை தீர்க்கதரிசிகளை குறித்தே எழுதுவேன். காரணம்:

பிரியமானவர்களே, உலகத்தில் **அநேகங் கள்ளத்தீர்க்க தரிசிகள்** தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.

நாங்கள் தேவனால் உண்டானவர்கள்; தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான்; 1 யோ. 4:1-6.

... அக்காலத்திலே சிப்போரின் குமாரனாகிய **பாலாக்** மோவாபியருக்கு ராஜாவாயிருந்தான்.

அவன் பேயோரின் குமாரனாகிய **பிலேயாமை** அழைத்து வரும்படி, ...ஸ்தானாபதிகளை அனுப்பி: எகிப்தி லிருந்து ஒரு ஜனக்கூட்டம் வந்திருக்கிறது;

அவர்கள் என்னிலும் பலவான்கள்; ஆகிலும், நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று அறிவேன்; ஆதலால், நீர் வந்து, எனக்காக அந்த ஜனத்தைச் சபிக்க வேண்டும்; அப்பொழுது ஒருவேளை நான் அவர்களை முறிய அடித்து, அவர்களை இத்தேசத்திலிருந்து துரத்திவிடலாம் என்று சொல்லச் சொன்னான் எண்.22:4-6.

(3-ம் பக்கம் பார்க்க)

ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தை எங்கள் மேல் போடும். சபைகளின் நிர்பந்த நிலைமையைக் குறித்த தரிசனத்தை எங்களுக்குத் தாரும். ஜெபத்தில் எங்களுக்கு ஆத்திரத்தை அளியும். நித்திரையை எங்கள் கண்களுக்கு தூரமாக்கும். அசட்டையை எங்களை விட்டகற்றி கண்ணீரையும் பெருமூச்சையும் தாரும். பிதாவின் வலது பாரிசத்திலிருந்து வேண்டிக் கொண்டிருக்கிறவரே, ஜெபியாத பாவிகளாகிய எங்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் பொழிந் தருளும், ஆமென். ரோ. 8:26; எபி. 5:7; சகரியா 12:10.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுது தேவன் பிலேயாமை நோக்கி: நீ அவர்களோடே போகவேண்டாம்; அந்த ஜனங்களைச் சபிக்கவும் வேண்டாம்; ***அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்*** என்றார் எண்.22:12.

பாலாக் மறுபடியும் அவர்களிலும் கனவான்களான அதிக பிரபுக்களை அனுப்பினான்.

பிலேயாம் பாலாகின் ஊழியக்காரருக்குப் பிரதியுத்தரமாக: பாலாக் எனக்குத் தன் வீடு நிறைய வெள்ளியும் பொன்னும் தந்தாலும், சிறிய காரியமானாலும் பெரிய காரியமானாலும் செய்யும் பொருட்டு, என் தேவனாகிய கர்த்தரின் கட்டளையை நான் மீறக் கூடாது... என்றான்.

இரவிலே தேவன் பிலேயாமிடத்தில் வந்து: அந்த மனிதர் உன்னைக் கூப்பிட வந்திருந்தால், நீ எழுந்து அவர்களோடே கூடப்போ; ஆனாலும், நான் உனக்குச் சொல்லும் வார்த்தையின்படி மாத்திரம் நீ செய்ய வேண்டும் என்றார் எண்.22:15-20.

இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் என்று பிலேயாம் கண்டபோது...

தன் கண்களை ஏறெடுத்து, இஸ்ரவேல் தன் கோத்திரங்களின்படியே பாளயமிறங்கியிருக்கிறதைப் பார்த்தான்; ***தேவ ஆவி அவன் மேல் வந்தது.***

யாக்கோபே, உன் கூடாரங்களும், இஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்!

தேவன் அருளும் வார்த்தைகளைக் கேட்டு, உன்னதமானவர் அளித்த அறிவை அறிந்து, சர்வ வல்லவரின் தரிசனத்தைக் கண்டு, தாழ விழும் போது, கண்திறக்கப்பட்டவன் விளம்புகிறதாவது;

அவரைக் காண்பேன், இப்பொழுது அல்ல; அவரைத் தரிசிப்பேன், சமீபமாய் அல்ல; ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்; அது மோவாபின் எல்லைகளை நொறுக்கி, சேத்புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும்.

ஏதோம் சுதந்தரமாகும், சேயீர் தன் சத்துருக்களுக்குச் சுதந்தரமாகும்; இஸ்ரவேல் பராக்கிரமஞ் செய்யும்.

யாக்கோபிலிருந்து தோன்றும் ஒருவர் ஆளுகை செய்வார்; பட்டணங்களில் மீதியானவர்களை அழிப்பார் என்றான் எண்ணாகமம் 24-ம் அதிகாரம்.

தீர்க்கதரிசி தன் மரணம் பற்றி சொன்னது என்ன?

...நீதிமான் மரிப்பது போல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவு போல் இருப்பதாக என்றான் எண்.23:10.

தீர்க்கத்தரிசியின் மரணம் எப்படி நிகழ்ந்தது?

கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவர்கள் மீதியானியருடன் யுத்தம் பண்ணி, புருஷர்கள் யாவரையும் கொன்று போட்டார்கள்.

அவர்களைக் கொன்று போட்டதும் அன்றி, மீதியானியரின் ஐந்து ராஜாக்களாகிய ஏவி, ரேக்கேம், சூர், ஊர், ரேபா என்பவர்களையும் கொன்று போட்டார்கள். ***பேயோரின் குமாரனாகிய பிலேயாமையும் பட்டயத்தினாலே கொன்று போட்டார்கள்*** எண்.31:7,8.

தீர்க்கதரிசி செய்தது என்ன?

இவர்கள் ஒருநாள் வாழ்வை இன்பமென்றெண்ணி, கறைகளும் இலச்சைகளுமாயிருந்து; உங்களோடே விருந்துண்கையில் தங்கள் வஞ்சனைகளில் ***உல்லாசமாய் வாழ்கிறவர்கள்.***

விபசார மயக்கத்தால் நிறைந்த வைகளும், பாவத்தை விட்டோயாத வைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, ***பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்.***

செம்மையான வழியை விட்டுத் தப்பி நடந்து, ***பேயோரின் குமாரனாகிய பிலேயாமின்*** வழியைப் பின்பற்றிப் போனவர்கள்; அவன் ***அநீதத்தின் கூலியை*** விரும்பி,

தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டான்; பேசாத மிருகம் மனுஷர் பேச்சைப் பேசித் ***தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத்*** தடுத்தது 2 பேதுரு 2:13-16.

தேவனுடைய பிள்ளைகளாகிய நீங்கள் செய்யவேண்டியது என்ன?

கள்ளத் தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் ***கள்ளப் போதகர்கள்*** இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான ***வேதப்புரட்டுகளைத் தந்திரமாய்*** நுழையப் பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்கு தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள்.

அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும்.

பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் ***தங்களுக்கு ஆதாயமாக*** வசப்படுத்திக் கொள்ளுவார்கள்; பூர்வகால முதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட அழிவு உறங்காது 2பேதுரு 2:1-3.

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்! கள்ளப் போதகர்களுக்கும் எச்சரிக்கையாயிருங்கள்!

இஸ்ரவேல் சித்தீமிலே தங்கியிருக்கையில், ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணத் தொடங்கினார்கள்.

அவர்கள் தங்கள் தேவர்களுக்கு இட்ட பலிகளை விருந்துண்ணும்படி ஜனங்களை அழைத்தார்கள்; ஜனங்கள் போய்ப் புசித்து, அவர்கள் தேவர்களைப் பணிந்து கொண்டார்கள்.

இப்படி இஸ்ரவேலர் பாகால் பேயோரைப் பற்றிக் கொண்டார்கள்; அதனால் இஸ்ரவேலர் மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது.

கர்த்தர் மோசேயை நோக்கி, கர்த்தருடைய உக்கிரமான கோபம் இஸ்ரவேலை விட்டு நீங்கும்படி நீ ஜனங்களின் தலைவர் எல்லாரையும் கூட்டிக் கொண்டு, அப்படிச் செய்தவர்களைச் சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப் போடுங்கள் என்றார்.

அப்படியே மோசே இஸ்ரவேலின் நியாயாதிபதிகளை நோக்கி: நீங்கள் அவரவர் பாகால்பேயோரைப் பற்றிக் கொண்ட உங்கள் மனிதரைக் கொன்று போடுங்கள் என்றான்.

அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் அனைவரும் ஆசரிப்புக் கூடார வாசலுக்கு முன்பாக அழுது கொண்டு நிற்கையில், அவர்கள் கண்களுக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் ஒரு மீதியானிய ஸ்திரீயைத் தன் சகோதரரிடத்திலே அழைத்து கொண்டு வந்தான்.

அதை ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனாகிய எலெயாசாரின் மகன் **பினெகாஸ்** கண்ட போது, அவன் நடுச் சபையிலிருந்து எழுந்து, ஒரு ஈட்டியைத் தன் கையிலே பிடித்து,

இஸ்ரவேலனாகிய அந்த மனிதன் வேசித்தனம் பண்ணும் அறையிலே அவன் பின்னாலே போய், இஸ்ரவேல் மனிதனும் அந்த ஸ்திரீயுமாகிய இருவருடைய வயிற்றிலும் ஈட்டி உருவிப்போக அவர்களைக் குத்திப் போட்டான்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்று போயிற்று.

அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்து நாலாயிரம் பேர்.

கர்த்தர் மோசேயை நோக்கி:

நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் **பினெகாஸ்**, என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்தி வைராக்கியம் காண்பித்ததினால், இஸ்ரவேல் புத்திரர் மேல் உண்டான என் உக்கிரத்தைத் திருப்பினான்.

ஆகையால், இதோ, அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிடுகிறேன்.

அவன் தன் தேவனுக்காக பக்தி வைராக்கியம் காண்பித்து, ***இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்தபடியினால்,*** அவனுக்கும் அவனுக்குப் பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார் எண்.25:1-13.

நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந் தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன் எசேக். 22:30

உங்கள் சகோதரன்,
அலுவலகம் : 95432 21008 வெஸ்லி தேவதாசன்
உதவி : 94897 40295 (WESLEY DEVADASON)

சபை ஜெபிக்க முக்கியத்துவம் கொடாவிட்டால் அது தன் பரிசுத்தத்தை காத்துக் கொள்ள முடியாது.

வார்த்தையும் ஜெபமும்

The Word and prayer

Andrew Murray

"நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" யோவா.15:7.

நமது ஆவிக்குரிய வாழ்விலும், குறிப்பாக நமது ஜெபத்திலும் கிறிஸ்துவில் தேவனுடைய வார்த்தைகள் இங்கு திறந்தளிக்கப்படும் காட்சி இது. வார்த்தைகளின் ஆழமான அர்த்தத்தில் தேவன் முடிவற்றவர். அவரில் ஜீவன், வலிமை, ஆவி, சத்தியம் யாவும் அடங்கியுள்ளன. அவர் பேசும் போது அவரது வார்த்தைகளில் தம்மையும், தமது அன்பையும், தமது ஜீவனையும், தமது சித்தத்தையும், வலிமையையும் அவற்றை ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு அருளிச் செய்கிறார். ஒவ்வொரு வாக்குத்தத்தத்திலும் நமது வலிமை அதைப் பற்றிக் கொள்ளவும் அதை சொந்தமாக்கிக் கொள்ளவும் உதவி செய்கிறார். அனைத்து கட்டளைகளிலும் அவர் தமது சித்தத்தையும், தூய்மையையும், பரிபூரணத்தையும் பகிர்ந்து கொள்ள வலிமையளிக்கிறார். தேவனுடைய வார்த்தையில் அவர் தம்மையே நமக்காக அளிக்கிறார். அவருடைய வார்த்தை என்பது நித்திய குமாரனாகிய கிறிஸ்து இயேசுவே. கிறிஸ்துவின் வார்த்தைகள் அனைத்தும் தெய்வீக உயிர்ப்பிக்கும் ஜீவனும் வலிமையும் நிரம்பியவை. "... நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" யோவா.6:63.

காது கேளாதவர்கள் வாய் பேசாதவர்கள் போன்றவர்களைக் குறித்து நாம் கற்றுக்கொள்ளும் போது பேசுவதற்கான வலிமை கேட்பதைச் சார்ந்துள்ளது என்றும், கேட்பதில் ஏற்படும் இழப்பு பேசுவதை பாதிக்கிறது என்றும் அறிந்து கொள்ளலாம். நாம் கேட்கக் கேட்கப் பேச முடிகிறது. இது தேவனோடுள்ள தொடர்பிலும் உண்மையானது. ஆவியில் ஜெபித்து நாம் பேசும் வார்த்தைகள் தேவனைத் தொடும் போது, காணப்படாத உலகம் தாக்கமடைகிறது. இத்தகைய ஜெபமும் பேச்சும் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதையே சார்ந்திருக்கிறது. எவ்வளவாக தேவனுடைய குரல், மொழி, ஆகியவற்றைக் கேட்கிறோமோ, அவரது வார்த்தைகளில் அவரது எண்ணங்களை ஏற்றுக் கொள்கிறோமோ அவரது உள்ளத்தையும் ஜீவனையும் நமது இருதயங்களில் ஏற்றுக்கொள்கிறோமோ அவ்வளவாக நாம் தேவன் கேட்கக்கூடிய குரலிலும் மொழியிலும் பேச கற்றுக்கொள்ள முடியும். கற்றுக் கொள்பவர்கள் காலை தோறும் எழுப்பப்பட்டு, கற்றவர்களின் நாவைப் பெற ஆயத்தமாகி, மனிதரோடும் தேவனோடும் பேசக்கூடும் ஏசா.50:4.

அவரது வார்த்தை மூலம் தேவனோடு ஐக்கியம்

தேவனுடைய குரலைக் கேட்பது என்பது, கருத்தோடு வார்த்தையைப் படிப்பதற்கு மேலானது. வார்த்தையை படித்து அறிவைப் பெற்றாலும் ஜீவனுள்ள தேவனோடு உண்மையான தொடர்பே இல்லாமலும் இருக்கலாம். ஆனால் பிதாவின் சமுகத்தில், ஆவியான வரின் நடத்துதலின்படி நான் படிக்கும் போது அந்த வார்த்தை தேவனிடமிருந்து நமக்கு உயிரூட்டமுள்ள வல்லமையாக வருகிறது. அது நமது பிதாவினுடைய குரலாகவே, நிஜமான குரலாக தேவனுடைய உறவினால் நமது இருதயத்தில் புகுந்து ஆசீர்வாதத்தையும் பெலனையும் தந்து ஜீவனுள்ள விசுவாசத்தினை பிரதிபலிக்கச் செய்து தேவனுடைய இருதயத்தைச் சென்றடைகிறது.

அந்தக் குரலைக் கேட்பதினாலே அதற்குக் கீழ்ப்படியவும் அதை விசுவாசிக்கவும் சாத்தியமாகிறது. முக்கியமானது என்னவென்றால் நாம் செய்யவேண்டுமென்று தேவன் சொன்னதை நாம் அறிவதல்ல, தேவன் தாமே அதைச் சொல்லுகிறார் என்பதை நாம் அறிய வேண்டும். அது ஒரு சட்டமல்ல, ஆனால் தேவனுடைய தனிப்பட்டதும் ஜீவனுள்ளதுமான அவருடைய உறவாகும். தேவன் எவற்றை வாக்குப் பண்ணியிருக்கிறார் என்ற அறிவல்ல, அவரே வாக்குப் பண்ணுகிற அவருடைய பிரசன்னத்தால் நமது விசுவாசமும் நம்பிக்கையும் ஜெபத்தினால் விழிப்படைய வேண்டும்.

"நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்". நாம் வார்த்தைகளை நமக்குள் எடுத்துக்கொண்டு, நமது சித்தத்திலும் வாழ்விலும் நமது மனப்போங்குகளிலும் நடபடிக்கைகளிலும், வெளிக்காட்ட வேண்டும். அவை நம்மில் நிலைத்திருக்க வேண்டும். நமது முழுவாழ்வும் நம்மை நிரப்பும் அந்த வார்த்தைகளின் வெளிப்பாடாயிருக்க வேண்டும். அந்த வார்த்தைகள் கிறிஸ்துவினை உள்ளேயும், நமது வாழ்வு அவரை வெளியேயும் காண்பிக்கின்றன. கிறிஸ்துவின் வார்த்தை கள் நமது இருதயத்தில் பிரவேசிக்கும் போது நமது வாழ்வாக மாறி தாக்கமடையச் செய்வதால் நமது வார்த்தைகள் அவரது இருதயத்தில் பிரவேசித்து அவரை தாக்கமடையச் செய்யும். எனது ஜெபம் எனது வாழ்வை சார்ந்தது. தேவனுடைய வார்த்தைகள் எனக்கு எப்படியிருக்கிறதோ எனக்குள் எப்படி இருக்கிறதோ அப்படியே எனது வார்த்தைகளும் தேவனுக்கும் தேவனுக்குள்ளும் இருக்கும்.

தேவனுடைய வார்த்தைக்கு ஒரு அன்பான பிரதிவினை

பழைய ஏற்பாடு பரிசுத்தவான்கள் தேவனுடைய வார்த்தைக்கும் நமக்கு மிடையிலுள்ள தொடர்பையும், எப்படி ஜெபம் அவர்களுக்கு அன்பான பிரதிவினையாக தேவன் பேசிய போது காணப்பட்டது என்பதையும் புரிந்து கொண்டார்கள்! வார்த்தை ஒரு வாக்குத்தத்தமாக இருந்தால் அவர்கள் தேவன் பேசியது போல செய்யும்படி எண்ணினார்கள். "நீர் சொன்னது போல செய்வீராக" "ஏனெனில் கர்த்தாவே நீர் பேசியிருக்கிறீர்" "உமது வாக்கின்படியே ஆவதாக" "உமது வார்த்தையின்படியே" போன்ற வார்த்தைகளால் தேவன் வாக்குத்தத்தங்களால் கூறியவை அவர்கள் ஜெபத்தில் பேசிய வற்றின் ஆதாரமும், ஜீவனும் என்று காண்பித்தார்கள்.

அந்த வார்த்தை ஒரு கட்டளையாயிருந்தால் அவர்கள் கர்த்தர் பேசியதைச் செய்தார்கள். "கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப் போனான்' ஆதி.12:4. அவர்களது வாழ்வு தேவனுடன் தொடர்புடையதாயிருந்தது. எனவே வார்த்தையும் சிந்தையும் பரிமாறிக் கொள்ளப்பட்டது. தேவன் பேசியதை அவர்கள் கேட்டு அதன்படி செய்தார்கள். அவர்கள் பேசியதை தேவன் கேட்டு அதன்படி செய்தார். ஒவ்வொரு வார்த்தை மூலமாகவும் அவர் பேசுகிறார். பூரணரான கிறிஸ்து அவற்றை நிறைவேற்ற தம்மையே அர்ப்பணித்தார். அவரது வார்த்தையை நாம் பின்பற்றி அதை நிறைவேற்ற முழுமையாகப் பிரயாசப்பட வேண்டும்.

சித்தமுள்ள கருவிகள்

"என் வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால்", நிபந்தனை எளிதானதும் தெளிவானதுமாயிருக்கிறது. அவருடைய வார்த்தைகளில் அவரது சித்தம் வெளிப்படுத்தப்படுகிறது. அவரது வார்த்தைகள் என்னில் நிலைத்திருக்கும் போது அவரது சித்தம் என்னை ஆளுகிறது. எனது சித்தம் வெறுமையான பாத்திரமாய் அவரது சித்தத்தால் நிரப்பப்படும். சித்தமுள்ள கருவியை அவர் தமது சித்தத்தால் நிரப்புகிறார்.

கீழ்ப்படிதலின் பயிற்சியிலும் விசுவாசத்தின் பயிற்சியிலும் எனது சித்தம் பெலனடைந்து அவரோடு ஆழமான உள்ளான தொடர்பு கொள்கிறது. அதனால் அவர் இந்த சித்தத்தினை முழுவதுமாக நம்பலாம். அவர் "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்ற வாக்குத்தத்தத்தினைக் கொடுக்க தயங்கமாட்டார். இதை விசுவாசித்து செயல்படுத்துகிறவர்களுக்கு இது நிஜமானது.

கிறிஸ்துவின் சீஷனே, நமது ஜெபங்கள் கேட்கப்படாமலிருக்கும் போது சாக்குப்போக்கு வேண்டாம். தேவஞானத்திற்கும் சித்தத்திற்கும் நாம் நம்மை அர்ப்பணிக்கவில்லை. நமது பலவீன வாழ்வும் பெலவீன ஜெபமுமே பதில் கிடையாததற்குக் காரணம். தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள் நம்மை பலப்படுத்துகின்றன. அதினாலே நாம் வாழ வேண்டும். அது கிறிஸ்துவின் வார்த்தை. நம்மை நேசித்து நம்மில் வாழ்ந்து, நம்மில் நிலைத்திருந்தவர் அவர். கீழ்ப்படிதல் மூலமாக கிறிஸ்துவோடு நம்மில் ஒரு பங்காக வாழ்ந்து நம்மோடு கிறிஸ்துவை இணைப்பவர். கிறிஸ்துவின் வார்த்தையே ஆவிக்குரியபடி

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவனைத் தொடவும் அவரைப் பற்றிக் கொள்ளவும் தகுதிப்படுத்துகிறது.

ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தாவே! இந்தப் பாடம் இன்று எனக்கு எனது அறிவின்மையை மறுபடியும் உணர்த்தி விட்டது. எனது ஜெபம் அதிக நம்பிக்கை மற்றும் மேலோங்கியதாயிருக்கவில்லை என்று காண்கிறேன். நான் உம்மிடம் அதிகமாகப் பேசி உம்மைப் பேச விடாமல் செய்து விட்டேன். விசுவாசத்தின் இரகசியம்: "எவ்வளவாக ஜீவ வார்த்தை என் அத்துமாவில் இருக்கிறதோ அவ்வளவாக விசுவாசம் என்னில் காணப்படும்" என்பதை புரியாமல் இருந்து விட்டேன். உமது வசனம் இதை எனக்குத் தெளிவாக உணர்த்திவிட்டது. "... யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும்..." (யாக்.1:19) "...தேவ சமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும் ..." (பிர.5:2) என்பதை கற்றிருக்கிறேன். உமது வார்த்தையை என் வாழ்வில் எடுத்துக் கொள்ளப்படும் போது மட்டும்தான் எனது வேண்டுதல்கள் உமது இருதயத்தில் ஏற்றுக் கொள்ளப் படும் என்பதை கற்று தாரும். உமது வார்த்தை எனக்குள் ஜீவ வல்லமையாக இருந்தால், உம்மை சார்ந்து வாழ பெலனை கொடுக்கும். அப்போது உமது வாக்குத்தத்தங்களை உமது வல்லமையின் கரம் செயல்படுத்தும்.

ஆண்டவரே, விருத்தசேதனமற்ற எனது காதுகளை விடுவிப்பீராக. கற்றுக் கொள்கிறவர்களின் திறந்த செவிகளைத் தருவீராக. காலைதோறும் பிதாவின் குரலைக் கேட்க என்னை விழிப்படையச் செய்யும். எனது பேச்சு உமது பேச்சின் எதிரொலியாயிருக்கட்டும். "மோசே தேவனோடே பேசும்படி ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும் போது, தன்னோடே பேசுகிறவரின் சத்தம் சாட்சிப் பெட்டியின் மேலுள்ள கிருபாசனமான இரண்டு கேருபீன்களின் நடுவிலிருந்துண்டாகக் கேட்பான். அங்கேயிருந்து அவனோடே பேசுவார்" எண்.7:89. ஆண்டவரே என் வாழ்விலும் இப்படியே நடக்கட்டும். நான் கேட்கவும் அந்த வார்த்தைகள் என்னில் நிலைத்திருக்கவும் செய்யும். அவ்வாறு முழு ஆசீர்வாதத்திற்கு நான் தயாராகட்டும்.

"நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்"

2026 தமிழ்நாடு தேர்தலுக்காக

ஜெபியுங்கள்

நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்.

நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ளயாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும்.

நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது.

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் 1தீமோத்தேயு 2:1-4.

தேவனுடைய வார்த்தையை தியானிப்பது

Meditate on God's word

Charles H. Spurgeon

"உமது கட்டளைகளை தியானித்து..." சங்.119:15.

நமது எஜமானாகிய ஆண்டவர் அடிக்கடி தியானம் செய்யவும் ஜெபிக்கவும் மலை ஏறிச் சென்றது போலவும் தோட்டங்களில் நிழலுக்குச் சென்று தமது பிதாவின் முகத்தைத் தேடினது போல நாமும் சிறிது நேரம் நமது நெருக்கடியான வாழ்வின் பணிகள், மனித உறவுகள் ஆகியவற்றை விட்டு விட்டு அமைதியான தியானத்துக் காகவும் நமது இருதயத்தினை அவரது அன்பின் மார்பில் ஊற்றிவிடவும் செலவு செய்வோமாக.

பல நேரங்களில் தனிமை சமுக உறவுகளை விடவும், அமைதி காப்பது பேசிக்கொண்டிருப்பதைவிட ஞான மாகவும் இருப்பதுண்டு. நாம் அதிகமாக தனிமையில், தேவ பணியில் அதிக ஆவிக்குரிய பெலனைப் பெறவும் அவரது வசனத்தை தியானிக்கவும் காத்திருப்பது கிறிஸ்தவ வாழ்வுக்கு நலமானது. தேவனது செயல்களை சிந்திப்பது அவற்றிலிருந்து உண்மையான சத்துணவைப் பெற ஏதுவாயிருக்கும்.

இந்த சத்தியம் ஒரு திராட்சைக் கொத்தை அழுத்தி பிசைந்து பலமுறை பிழிவதால் நாம் இரசத்தைப் பெறுவதற்கு ஒப்பானது. அதை மிதிக்கிறவர் அவற்றின் மேல் பலமுறை மகிழ்வுடன் மிதிப்பதால் விலையேறப் பெற்ற இரசம் வீணாகாமல் சேர்க்கப்படும். அது போலவே தேவ வசனங்களைப் பல முறை வாசித்து தியானிப்பதின் மூலம் அதிலிருந்து ஆறுதலாகிய இரசத்தைப் பெற முடியும்.

நமது உடல்கள் வாய் மூலமாக உணவை உட்கொள்ளுவதால் மட்டும் வளர்ச்சியடைவதில்லை, ஆனால் தசைகளும், நரம்புகளும், எலும்புகளும் அனைத்து பகுதிகளும் வளர்ச்சியடைய அது செரிக்க வேண்டும். செரித்தல் மூலமாக வெளிப்படையான உணவு உள்ளான வாழ்வுக்கு உடலோடு இணைந்து விடுகிறது. அதுபோல சிறிது நேரம் மட்டும் வசனத்தை கவனிப்பதால் ஆத்துமா தெய்வீக சத்தியங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது.

கேட்பதும், வாசிப்பதும், அடையாளப்படுத்துவதும் உள்ளான ஜீரணத்திற்கு பயன்பட்டாலும் சத்தியம் உள்ளான ஜீரணத்தை முழுமையாகப் பெற தியானம் மிக அவசியம். அனேக கிறிஸ்தவர்கள் ஏராளமான பிரசங்கங்களை கேட்டாலும் தெய்வீக வாழ்க்கையில் மெதுவாகவே முன்னேறுகிறார்கள். ***காரணம் அவர்களது அறைவீட்டு ஜெபம் குறைவு.*** தேவனுடைய வசனத்தை அவர்கள் தியானிப்பதில் உதாசீனமாயிருக்கிறார்கள். அவர்களிடம் கோதுமை இருக்கிறது, அதை விரும்புகிறார்கள். ஆனால் அது அரைக்கப்படவில்லை. அவர்கள் வயல் நிலம் விளைந்திருக்கிறது. ஆனால் அவர்கள் சென்று அதை சேர்க்கவில்லை. மரத்தில் கனிகள் பழுத்துத் தொங்குகின்றன, ஆனாலும் அவர்கள் அவற்றைப் பறிக்கவில்லை. கால்கள் வழியாக நீரோடை பாய்ந்து சென்றாலும் குனிந்து அதைப் பருக முயற்சிப்பதில்லை. இவ்விதமான தவறுகளிலிருந்து தேவனே நீர் எங்களைக் காப்பாற்றும். இந்தக் காலை வேளையிலே நான் 'உமது கட்டளைகளை நான் தியானிப்பேன்' என்ற நல்ல தீர்மானத்தை எடுக்கட்டும்.

தேவ வார்த்தையின் வல்லமை

The power of God's word

Derek Prince (1915 - 2003)

"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படி செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்" ஏசா.55:8-11.

தேவன் சிந்தனைகளிலிருந்து ஆரம்பிக்கிறார். அவர் சொல்லும்போது இயற்கையாக நமது எண்ணங்கள் அவரது எண்ணங்களாயிருப்பதில்லை என்கிறார். அப்படியானால் நாம் எப்படி தேவனுடைய எண்ணங்களை சிந்திக்க முடியும்? அதற்குரிய பதிலை தேவன் அடுத்த வசனத்தில் தருகிறார். தேவனுடைய வழிகளும் அவரது நினைவுகளும் பரலோக தளத்தில் உள்ளன. ஆனால் நமது வழிகளும் நினைவுகளும் தேவனது நிலைக்குக்கீழாக இருக்கின்றன. ஆனால் தேவனுடைய வார்த்தை அவரது வழிகளையும் நினைவுகளையும் பரலோகிலிருந்து கீழே கொண்டு வந்து நமது வாழ்வுகளிலும் இருதயங்களிலும் நமக்குத் தேவையான பலன்களை ஏற்படுத்தும்.

இதே பகுதியில் தேவன் வார்த்தையைக் குறித்தும் பேசுகிறார். "அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது தான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புறப்பட்டு, சமாதானமாய்க் கொண்டு போகப்படுவீர்கள்; பர்வதங்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கஞும் மலைகளும் உங்களுக்கு முன்பாகக் கெம்பீரமாய் முழங்கி, வெளியின் மரங்களெல்லாம் கைகொட்டும். முட் செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும்; காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச் செடி எழும்பும்; அது கர்த்தருக்குக் கீர்த்தியாகவும், நித்ராமூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும்." ஏசா.55:11-13.

இதுவே பரத்திலிருந்து இறங்கி வரும் தேவனுடைய வார்த்தை. அது நமது இருதயங்களில் பிரவேசித்து, நமது உள்ளங்களை ஆட்கொண்டு நமது வழிகளையும் சிந்தனைகளையும் தேவனுடைய வழிகளாலும் சிந்தனைகளாலும் இடம்பெயரச் செய்யும். நமது உள்ளங்கள் தேவனுடைய வார்த்தையால் நிரம்பும் போது நாம் தேவனைப் போல சிந்திக்க ஆரம்பிக்கிறோம். நமது அனைத்து வாழ்வின் எண்ணங்களும் முற்றிலும் மாறி விடுகின்றன.

அதனால் வினைவுகள் அழகிய மொழியில் கூறப்பட்டுள்ளன: **சமாதானம்** (நீங்கள் சமாதானத்தோடு நடத்தப்படுவீர்கள்), **சந்தோஷம்** (சந்தோஷத்தோடே புறப்பட்டுச் செல்வீர்கள்), **துதி** (இயற்கை கூட துதி செலுத்தும் - "வெளியின் மரங்கள் கைகொட்டும்"), **மற்றும் நல்ல பலன் கிடைக்கும்.** (முட்செடிக்குப் பதிலாக தேவதாரு விருட்சம் முளைக்கும். காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச் செடி எழும்பும்).

தேவனுடைய வார்த்தை நம்மில் பிரவேசித்து நாம் அவைகளை ஏற்றுக் கொள்ளும் போது நாம் அவற்றை தியானிக்கிறோம். நமது சொந்த வழிகளும் நினைவுகளும் முட்களையும் காஞ்சொறிகளையும் போன்றவை. அவை பலன் தராது. அவற்றால் நமக்கு எந்த உதவியுமில்லை. ஆனால் அவை தேவ வசனத்தால் இடப்பெயர்ச்சி அடையும் போது முட்களுக்கும் காஞ்சொறிக்கும் பதிலாக தேவதாரு விருட்சமும் மிருதுச் செடியும் வளரும்.

நண்பா தேவ வசனம் ஒரு விருந்து. வேத வாக்கியங்களிலுள்ள ஆசீர்வாதங்களை அந்த நீரூற்றிலிருந்து பானம் பண்ணுங்கள். உங்களுக்காகவே சேமித்து வைக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களை ருசித்துப் பாருங்கள். தேவனுடைய வாக்குத்தத்தங்களை சார்ந்து கொள்ளுங்கள். பரிசுத்த வேத வாக்கியங்களால் உங்கள் பாதை ஒளியூட்டப்படட்டும்.

சமாதானம் வேண்டுமா, வேதத்தை வாசியுங்கள். விசுவாசம் பெருக வேண்டுமா, சாத்தானை தூர விலக்க வேண்டுமா? ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அது வேத வாக்கியம் எபேசி.6:17. சந்தோஷம் வேண்டுமா? ஜெப வாழ்வில் மாற்றம் வேண்டுமா? கிறிஸ்துவின் சகல ஐசுவரியங்களும் வேண்டுமா? அவரது வார்த்தை உங்களில் வாசம் பண்ணட்டும். நீங்கள் பாடலோடும் இசையோடும் ஞானப் பாடல்களோடும் திரளான ஆசீர்வாதங்களோடும் உங்கள் ஆத்துமா நிரம்பி வழிய வேதத்தைப் படித்து தியானியுங்கள்.

ஆண்டவர் தாமே அவரது வசனத்தில் வேரூன்றி வளர உதவி செய்வாராக.

வார்த்தை உங்களில் வாசமாயிருக்கட்டும்

Let the word dwell in you

Wesley Duewel (1916 - 2016)

தேவனுடைய வார்த்தை உங்களில் வாசம் பண்ணுகிறதா? வார்த்தையிலேயே வாழுகிறீர்களா? கிறிஸ்து தனது ஜனங்களில் வாழ்வது போலவும், அவர்கள் அவரில் வாழ்வது போலவும், அவரது வசனம் அவர்களிலும் அவர்கள் அவரது வசனத்திலும் வாழ முடியும். பவுலின் வாழ்வில் சொல்லிலடங்காத ஆசீர்வாதம் வார்த்தையால் நிரம்புகிறது. "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக..." கொலோ.3:16.

வேதவாக்கியங்களை வாசிக்க அதிக அளவில் சமயம் செலவு பண்ணி வராவிட்டால் வார்த்தை உங்களில் வாசம் பண்ண முடியாது. அவரது வார்த்தையாகிய வேத வாக்கியங்களை வாசிக்க சமயம் செலவிடாவிட்டால் கிறிஸ்துவை நேசிப்பதாக ஒருவர் கூற முடியுமா? நாம் நண்பர்களோடு பேச அதிக சமயத்தைச் செலவு பண்ணலாம் அல்லது அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். வேதம் வாசித்து தேவனுடைய குரலை ஒரு நாள் பதினைந்து நிமிடமாவது கேட்க செலவு பண்ணாவிட்டால் அவர்கள் கிறிஸ்துவை நேசிக்கிறோமென்று சொல்ல முடியுமா?

ஒரு விசுவாசி புதிய ஏற்பாட்டினை வருடம் ஒரு முறையாவது படிக்க வேண்டும். ஒருவர் ஒவ்வொரு வார நாட்களிலும் மூன்று அதிகாரங்களும் ஞாயிற்றுக் கிழமை ஐந்து அதிகாரமும் படித்து வந்தால் ஒரு வருடத்திற்குள்ளாக வேதாகமம் முழுவதையும் ஒரு முறை படித்து முடிக்கலாம். இதைவிடக் குறைவாகப் படிப்பவர்கள் ஊழியர்களாக இருக்க முடியாது. ஒழுங்கான முறையில் வேதபுத்தகத்தைப் படிக்க முடியாவிட்டால் வார்த்தை நம்மில் வாசம் பண்ண முடியாது. வேதத்தினை வருடங்களாகவே ஒழுங்காகப் படிக்காவிட்டால் அது தேவனை கனவீனம் பண்ணுவதாகும்.

நாம் நண்பர்களோடு பேச அதிக சமயத்தைச் செலவு பண்ணலாம் அல்லது அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். வேதம் வாசித்து தேவனுடைய குரலை ஒரு நாள் பதினைந்து நிமிடமாவது கேட்க செலவு பண்ணாவிட்டால் நாம் கிறிஸ்துவை நேசிக்கிறோமென்று சொல்ல முடியுமா?

வேதத்தை, குறிப்பாக புதிய ஏற்பாட்டை மறுபடியும் படிப்பது நமக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். ஒவ்வொரு முறை படித்து முடிக்கும் போதும் இருதயம் களிப்பால் துள்ளும். எந்த வழியிலும் நாம் பெற்றுக் கொள்ள முடியாத ஆவிக்குரிய பெலனை வேதத்தை வாசிப்பதன் மூலம் பெறலாம். வேத வாக்கியங்களை உணவாக்குவது ஒரு அற்புத விசுவாச மருந்தாகும் (Tonic). "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" ரோமர் 10:17.

அடிக்கடி வாசிப்பதால் தூய ஆவியானவர் வசனங்களை எளிதாக ஞாபகத்தில் கொண்டு வருகிறார். அவர் அதை உங்களை வழிநடத்தவும், சீர்திருத்தவும், உறுதியையும் விசுவாசத்தையும் கட்டி எழுப்பவும் பயன்படுத்துகிறார்.

வேதவசனத்தில் குறிப்பிடக் கூடிய அதிக விலையேறப் பெற்ற ஒன்று உண்டு. தேவ வசனத்திலிருந்து நாம் பெற்றுக் கொள்வது போன்ற ருசிகரமானதும் திருப்தி தருவதுமான உணவு வேறு ஒன்றில்லை. வேத வசனங்களிலிருந்து எழும்பும் அற்புதமான இசை உங்கள் ஆத்துமாவுக்கு தேவனிடமிருந்து நேரடியாக வரும் செய்தியாகும். வேத வசனத்தில் தேவனால் வெளிப்படுத்தப் படும் கிறிஸ்துவின் புதிய வெளிப்பாடும் அவரது சித்தமும் கிளர்ச்சியை உண்டு பண்ணும் தீரச் செயல்களாகும். கிறிஸ்து மற்றும் அவரது வார்த்தை போல் நிலைத்து நிற்கும் ஐசுவரியங்கள் எதுவுமில்லை.

நமது அனுதின அப்பம்

Our daily bread

Octavius Winslow

"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" மத்.6:11.

ஒவ்வொரு நாளும் அவர் மீதுள்ள விசுவாசத்தினால் செழிப்பான வாழ்வு வாழ தேவன் உதவி செய்கிறார். அனுதின மாம்ச போராட்ட வாழ்வில், பரிசுத்தமான வெற்றி வாழ்க்கை வாழ வேண்டுமானால், அனுதினமும் இயேசுவில் விசுவாசம் வைத்து அவர் பாதத்தில் காத்திருக்க வேண்டும்.

என் பரம பிதாவே, நேற்றைய தேவைகள் நிறைவேறி முடிந்து விட்டன. நாளைக்காக உம்மிடம் வருகிறேன். சூழ்நிலைகளின் தேவையைப் பொறுத்து எல்லாவற்றையும் தருவீராக. நியாயத் தீர்ப்பைக் குறித்த தெளிவு, தீர்மானங்களில் உறுதி, சித்தத்தின் தேர்வு, உபதேசங்களில் நேர்மை, இருதயத்தில் சுத்தம், தைரியமான நல் நடக்கை, கிறிஸ்துவைப் போன்ற சாந்தம், தூய அன்பு, விழித்திருந்து ஜெபித்தல், உறுதி போன்றவற்றை எனக்குத் தாரும்.

எப்படிப்பட்ட சோதனைகளுக்கு நான் உட்படுத்தப்படுவேன், எந்த எதிரி என் முன்னால் வருவான், எந்த சோதனைகள் எனக்கு முன் வரும், என்று நான் அறியேன். எந்த மேகங்கள் என்னைச் சூழ்ந்து கொள்ளும், எந்த துக்கமான நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் என் ஆவியைக் காயப்படுத்தக்கூடும் என்பதை நான் அறிவேன்.

ஆண்டவரே, எனது அனுதின அப்பமாக கிருபை, பெலன், அன்பு, வழிகாட்டுதல், விசுவாசம் ஆகியவற்றைத் தருவீராக.

அந்தரங்க ஜெபத்தின் முக்கியத்துவமும் மகிழ்ச்சியும்

The priority and delight of secret prayer

E.M.Bounds (1835 - 1913)

"சோர்ந்து போகாமல் **எப்பொழுதும்** ஜெபம் பண்ண வேண்டும்" லூக்.18:1. இந்த வார்த்தைகள் ஆண்டவர் இயேசு கூறியவை. அவர் சீஷர்கள் ஜெபிக்க வேண்டிய அவசரம், முக்கியத்துவம் மட்டுமல்ல அவர்கள் முன்னுதாரணமாகவும் இருக்க விரும்பினார். ஆனால் அவர்களோ அப்படி ஜெபிப்பதில் மிகவும் அசதியாக காணப்பட்டார்கள்.

'**எப்பொழுதும்**' என்பது முக்கியமானது. **ஜெபம்** என்பது அர்த்தமற்ற செயலோ அல்லது கடமையோ அல்ல. அது நெருக்கடியான வேலைகள் மத்தியில், நாள் சோர்போடு முடியும் போது செய்ய வேண்டியதல்ல. நாம் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும். காலையில் வேலைக்குச் செல்லும் ஆத்திரத்திலோ, இரவில் மிகுந்த களைப்பும் தூக்க மயக்கமுமான வேளை யிலோ ஜெபிப்பதல்ல. தேவன் எப்போதும் ஜெபத்தைக் கேட்கிறவர். அவரது செவிகள் தமது பிள்ளைகளின் கதறுதலுக்கு எப்போதும் கவனமாயிருக்கிறது. ஆனால் நமது ஜெபம் நாம் தொலைபேசியை பயன்படுத்துவது போல விரைவான சம்பாஷனை செய்ய ஜெபம் பயன் படுத்தப்படக்கூடாது.

நெருங்கிய உறவுக்கு வளர்ச்சி அவசியம். தனிப்பட்ட உதவிகளுக்காக சுருக்கமாக, கருத்தற்ற நிலையில் திரும்பத் திரும்ப ஏறெடுப்பது விண்ணப்பமல்ல. பரலோக ராஜாவிடம் விண்ணப்பிக்க இது முறையல்ல. '**ஜெபத்தின் நோக்கம்:** தேவனிடம் கேட்பது மட்டுமல்ல, தேவனோடு நெருங்கிய தொடர்பை வலுப்படுத்தி, நம்முடைய விண்ணப்பங்களுக்கு தேவன் செவி கொடுத்து, பதில் பெற்று கொள்வதாகும்'. இந்த நோக்கத்தினைப் பெற பொறுமையுடன் தொடர்ந்து காத்திருந்து ஜெபிக்க வேண்டும். நமது இருதயத்தை அவரிடம் ஊற்றி, அவர் நம்மிடம் பேச அனுமதிக்க வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே அவரை அறிய முடியும். அவரை அதிகமாக அறியும் போது நாம் அவரது பிரசன்னத்தில் அதிக சமயம் செலவழிப்போம். அந்த பிரசன்னம் நமக்கு நிலையானதாகவும் அளவற்ற மன மகிழ்ச்சியாகவுமிருக்கும்.

கர்த்தரோடுள்ள நிலையான உறவு

'**எப்பொழுதும்**' என்பது நமது வாழ்வின் சாதாரண கடமைகளை உதாசீனம் பண்ணுவதல்ல. தேவனோடுள்ள நெருங்கிய உறவில் தனி அறையில் அவரோடு அமைதியாக ஜெபிக்க வேண்டும். நமது தொடர்பு அவரை விட்டு விலகக்கூடாது. இருதயம் பிதாவின் தொடர்பில் இருப்பதால் அவரோடு அன்பான உறவில் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு வேலையில் ஈடுபட்டு அவ்வேலை முடியும் போது அது இயற்கையாகவே அவரிடம் திரும்பிவிடுகிறது. இந்தக் கண்ணோட்டத்தில் நாம் ஜெபத்தைப் பார்த்தால் அது ஒரு நிலையான உறவு மட்டுமல்ல, ராஜாவோடு தடையற்ற நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துகிறது. ஜெபம் நாம் முன்பு கொண்டிருந்த எதிர்கால பயத்தை போக்கி, ஒரு கடமையாக செய்யாமல், அனுபவிக்க வேண்டிய பெரும் பாக்கியமாக, எப்போதுமே அரிதான மனமகிழ்ச்சியை கொடுத்து புதிய அழகினை வெளிப்படுத்துவதாயிருக்கும்.

இவ்வாறு காலையில் கண் விழிக்கும் போது நமது எண்ணங்கள் பரத்துக்கு நேராக எழும்புகின்றன. அனேக கிறிஸ்தவர்களுக்கு காலை நேரங்கள் மிக விலையேறப் பெற்றவை. ஏனெனில் அந்த நாளில் செயல்பாடுகளுக்கான, பரிசுத்தமான கூட்டுறவுக்கான வாய்ப்பாயிருக்கிறது. ஒரு புதிய நாளின் துவக்கத்தை தேவனோடு தனித்து செலவிடுவது மகிமையும் ஆச்சரியமுமானது. **முடி** என்ற பக்தன் ஜெபிக்க வேறு எந்த இடமும் கிடைக்காவிடில் நிலக்கரி சேமித்து வைக்கும் அறையில் உட்கார்ந்து விலையேறப்பெற்ற வேதத்திலிருந்து உண்மையான கொழுமையான விருந்தை உண்டு, பின் இருதயத்தை ஊற்றி ஜெபிப்பார்.

ஜெபமும் வேதவசனமும்

ஜார்ஜ் முல்லரும் காலைப் பொழுதின் அமைதியான வேளையை, வேத வாசிப்பிலும் ஜெபத்திலும் செலவு பண்ணினார். ஒரு காலத்தில் காலையில் உடை மாற்றிய பின் ஜெபிப்பது அவரது வழக்கம். பின்னர் அதில் மாற்றம் ஏற்பட்டது. அவரே கூறியது: "வேத வசனத்தை வாசிப்பதும் தியானிப்பதுமே எல்லாவற்றிலும் முக்கியமானது. அப்போது எனது இருதயம் ஆறுதலடையவும், உற்சாகப்படுத்தப்படவும், எச்சரித்து கண்டிக்கப்படவும், போதிக்கப்படவும் ஏதுவாயிருந்தது. இவ்வாறு வேத வசனத்தின் மூலம், அதை தியானிக்கும் போது, எனது இருதயம் தேவனோடுள்ள நெருங்கிய உறவை மற்றும் பிரசன்னத்தை அனுபவிக்க முடிந்தது".

எனவே அதிகாலை வேளையில் புதிய ஏற்பாட்டை வாசித்து தியானிக்க ஆரம்பித்தேன். முதலாவது வாசிக்க யிருக்கும் அவருடைய விலைமதிப்பற்ற வார்தையின் மீது ஆண்டவரது ஆசீர் வாதங்களுக்காக சிறு ஜெபம் செய்தேன். வசனத்தை தியானிக்க ஆரம்பித்த போது ஒவ்வொரு வசனத்திலும் ஆசீர்வாதத்தைப் பெற நாடினேன். அதை பொது மக்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்காகவோ, அந்த வசனங்களிலிருந்து பிரசங்கம் தயாரிப்பதற்காகவோ அல்ல, எனது ஆத்தும உணவுக்காக தியானித்தேன். அதன் விளைவாக சில நிமிடங்களில் என் ஆத்துமா பாவ அறிக்கை அல்லது நன்றி சொல்லுதல் அல்லது மன்றாட்டு அல்லது விண்ணப்பத்திற்கு நேராக ஆயத்தமானதை எப்போதுமே நான் உனர்ந்தேன்.

வேத வாசிப்பும் ஜெபமும் இணைந்து செல்லக் கூடியவை. ஒன்றை நாம் உத்தமமாகச் செய்யும்போது அடுத்ததும் தானாக இணைந்து வரும்.

சோர்ந்து போகாமல் இடைவிடாமல் ஜெபிப்பது ஒரு முக்கிய கடமை

ஆயினும் நாம் இடைவிடாமல் ஜெபிப்பதில்லை. இது நம்மில் அனேகரது குறை. நாம் இப்போது ஜெபிப்பதைவிட கூடுதலாகவும் அதிக நேரமும் ஜெபிக்க வேண்டும்.

ராபர்ட் முர்ரே மெக்கெய்ன் என்ற வரம் பெற்ற பரிசுத்தவானைக் குறித்து, "அவரை மகனாகவோ, சகோதரனாகவோ, நண்பனாகவோ, போதகராகவோ பார்த்தாலும் குறையற்றவரும் கவர்ச்சியான ஒரு உத்தம கிறிஸ்தவ சாட்சியாய் உயிருள்ள வடிவில் காணப்பட்டார்" என்று கூறப்படுகிறது. அதிக நேரம் முழங்காலில் நிற்பது என்றால் என்ன என்பதை அறிந்தவர். பிறரையும் தூய மன்றாட்டில் ஈடுபடுத்துவதில் களைப்பில்லாதவர். அவர் அடிக்கடி கூறுவது "தேவனுடைய பிள்ளைகள் ஜெபிக்க வேண்டும்" என்பதாகும். "**அவர்கள் இரவும் பகலும் அவருக்கு நேராகக் கண்ணீர் விட வேண்டும். தேவன் உங்கள் ஒவ்வொருவருடைய கண்ணீரின் ஜெபத்தையும் சுறுசுறுப்பான பகல் வேளைகளிலும் தனியாக இரவு ஜாம நேரங்களிலும் கேட்பார்**".

அவரது கையேட்டில் "நான் மாலையும் பார்க்குமுன் ஜெபிக்க வேண்டும்...". கிறிஸ்து காலையில் எழுந்து தனியான இடத்தில் சென்று ஜெபித்தார். தாவீது, "அதிகாலை உம்மைத் தேடுவேன். காலையில் நீர் என் சத்தத்தைக் கேட்பீர்" என்கிறார். மகதலேனா மரியாள் அதிகாலையில் இருட்டோடே இயேசுவின் கல்லறைக்கு வந்தாள். நான் தேவனோடு ஒரு நாளை ஆரம்பித்து அவரது முகத்தை முதலாவது பார்த்து எனது ஆத்துமா இன்னொருவருடன் நெருங்காமல் இருப்பது நல்லது என்று உணருகிறேன். 'நான் விழிக்கும் போது இன்னும் உம்மோடு இருக்கிறேன்'. நான் ஒருவேளை அதிக நேரம் தூங்கி விட்டால், அல்லது நான் மிக நேரத்தோடு ஒரு பிரயாணம் செல்வதாக இருந்தால், அல்லது ஏதோ கொஞ்ச நேரமே இருந்தால் உடையை வேகமாக மாற்றிக் கொண்டு சில நிமிடங்களாவது தேவனோடு தனித்திருக்க வேண்டும். ஜெபத்தை விட்டு விடக் கூடாது. ஆனால் எந்த ஒரு செயல்பாட்டிலும் இறங்குமுன் ஒரு மணி நேரமாவது ஜெபிக்க வேண்டும். ஒரு நாளின் நல்ல மணி நேரங்களை தேவனோடு செல விடுவது மிக நல்லது. இரவில் நான் விழித்தால் எழுந்து **தாவீதைப்** போலவும் **ஜான் வெஸ்ட்** என்பவர் போலும் ஜெபிக்க வேண்டும்.

மெக்கெய்ன் 'எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும்' என்பதில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். அதினால் அவரது

(8-ம் பக்கம் பார்க்க)

வாழ்வு சுருங்கியதாயினும் கனி தருவ தாகவும் அடிக்கடி அதிகநேரம் அறை வீட்டில் தனிமையில் ஆண்டவரோடு செலவிடுவதால் அதிக வல்லமையுடை யதாகவும் காணப்பட்டது.

ஜெபிக்கிற ஆண்களும் பெண்களும் இன்று தேவை

மெக்கெய்ன் போன்ற ஜெபிக்கிற ஆண்கள் இன்று தேவை. மிகப் பெரிய பணியாகிய ஜெபத்தில் தங்கள் சமயத் தையும் கவனத்தையும் செலுத்தி, பரிசுத்த பணியாகிய மன்றாட்டு ஜெபத்திற்கு முழுமனதோடு தொடர்ந்து ஜெபிக்கும் வீரர் வேண்டும். தேவ பணி மனிதரிடம் ஒப்புவிக் கப்பட்டிருக்கிறது, தேவன் தம்மை மனிதருக்காக அர்ப்பணித் தார். ஜெபிக்கும் மனிதர் தேவனுடைய பணி யாட்கள். அவர்கள் அவருடைய பணியை நிறைவேற்றி அவரது திட்டங்களையும் செயல்படுத்துகிறார்கள்.

தேவ ராஜ்யத்தின் பிள்ளைகளா யிருக்க நாம் ஜெபித்தே ஆக வேண்டும். ஜெபத்தைக் குறைக்கிறவர்கள் பெற்றி ருந்த ஆவிக்குரிய உற்சாகத்தை இழந்து போவார்கள். சபை ஜெபிக்க முக்கியத் துவம் கொடாவிட்டால் அது தன் பரிசுத் தத்தை காத்துக் கொள்ள முடியாது. சுவிசேஷத்தை அறிவிக்கும் வல்ல மையும் குன்றிப் போகும். சுவிசேஷம் அறிவிக்க, போராட, மேற்கொள்ள ஜெபம் அவசியம். அது இடைவிடாமல் உடனுக்குடன் வாஞ்சையோடு ஏறெடுக் கப்பட வேண்டும்.

இந்த காலத்தில் மட்டுமல்ல எல்லா காலத்திலும் சபையின் மிக பெரிய தேவை, பலத்த விசுவாசமும், நிறைவான பரிசுத்தமும், ஆவிக்குரிய வலிமையும், மனதுருக்கமும் உற்சாகமுமுள்ள மக்களே. அவர்கள் தங்கள் ஜெபங்களால் ஆவிக்குரிய புரட்சியை ஏற்படுத்துவார்கள்.

விசுவாசத்தின் பாதை

The way of faith

Jessie Penn Lewis

"மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும்..." எபேசி.4:11.

சிலுவையிலறையப் பட்ட இயேசுவையே தொடர்ந்து நோக்கிக் கொண்டிருப்பதும் தேவ ஆவியைச் சார்ந்து கிரியை செய்வதும் அவருக்கு சேவை செய்வதுமே 'விசுவாசத்தின் பாதை யாகும்'. இதன் மூலம் கிறிஸ்து நம்மில் முழுவதுமாக உருவாகி, விசுவாசி கிறிஸ்துவின் முழுமையின் அளவை அடைகிறான்.

கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட ஆத்துமாவே, 'சிலுவையின் வார்த்தை' தேவ வல்லமையோடு உங்களி டத்தில் வந்திருந்தால், நீங்கள் அவரோடு சிலுவையிலறையப்பட ஒப்புக் கொண்டு, உண்மையாகவே உயிர்த் தெழுந்த ஆண்டவரோடு இணைந்திருந் தால் ஜாக்கிரதை! ஒவ்வொரு நாளும் உங்கள் இருதய பார்வையை சிலுவைக்கு நேராகத் திருப்புங்கள். திரியேக தேவனைத் துதியுங்கள். அதன் மூலம் உங்களுக்காக மரித்தவரோடு வாழலாம்.

1. விசுவாசத்தினால், தேவனுடைய கிரியையால் தாமதமில்லாமல் இயேசு வின் சிலுவை மரணத்திற்கு உங்களை அர்ப்பணியுங்கள். தாமதம் வேண்டாம். பழைய வாழ்வில் சாபமான காரியங் களாக தூய ஆவியால் வெளிப்படுத்தப் பட்ட பாவங்களை தூய ஆவியான வரிடம் கொண்டு வந்து கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் விடுதலை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் ஆவிக்குரிய வாழ்விலெல்லாம் தேவனுக்கு பிரிய மற்றதாகக் காண்பிக்கப்படும் ஒவ்வொன் றையும் விட்டுவிலகுங்கள். உங்கள் வழி களிலெல்லாம் அவரது ஒளி பிரகா சிக்கும். எனவே உங்கள் கண்ணுக் கினியவைகள் தேவ ஒளியில் நடக்கும் போது நேர்மையற்றதாகலாம்.

2. தேவனுடைய உத்தமத்தால் விசுவாசத்தின் மூலம் தற்காலத்தில் மட்டும் வாழவேண்டும். தூய ஆவி யானவர் இயேசுவின் வாழ்வை உங்க ளோடு இணைக்கும்படி அவருடைய பெலத்திற்கு ஒப்புவித்து, உங்கள் கடமையின் பாதையில் "அடுத்த காரியத்திற்கு" செல்லுங்கள். தேவன் உங்களிலிருந்து கிரியை செய்து அவருடைய சித்தத் திற்கும் விருப்பத்திற்கும் ஏற்றபடி செயல்படுகிறாரென்று விசுவாசியுங்கள். நீங்கள் தவறான வழியில் நடந்தால் அவருடைய திறமையான கரங்களை நம்பி சரியான அடிகளை மறுபடியும் எடுத்து வைக்கவும், வீணாகக் கவலைப் படாமல் அவரது அன்பில் தொடர்ந்து, அவரது பாதுகாவலுக்கே முற்றிலும் விட்டு விடுங்கள்.

3. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினால் அவரோடு நடவுங்கள். அனைத்து சோதனை களையும் உங்களையோ, பின்னிட்டுத் திரும்பியோ பாராமல் முன்னேறுங்கள். அவருடைய வார்த்தை உங்களில் நிறைவாய்த்தங்கி, நீங்கள்வாழ வேண்டிய விதத்தை போதிக்கட்டும். உங்கள் இருதயத்தின் வாஞ்சைகளை அவரிடம் ஊற்றிவிடுங்கள். அப்போது அவர் சுற்றிலுமுள்ளவர்களுக்கு உங்கள் மூலம் அவரை வெளிப்படுத்துவார்.

4. விசுவாசத்தில் உறுதியாய் நிற்பீர்களாக. அகந்தை வேண்டாம். கர்த்தருக்குப் பயப்படுங்கள். கடந்த கால அவரது கிருபையின் அனுபவங்கள், அவரது சார்பிலிருந்து விலக்க வேண்டாம். ஒவ்வொரு நிமிடமும் அவரிடமிருந்து வல்லமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எதிரி கவனித்துக் கொண்டே இருக்கிறான். அவனுக்கு இடமளித்தால் கண்ணியில் வீழ்த்தி விடுவான். உங்கள் ஆண்டவருக்குள் மறைந்திருங்கள். அவர் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக உங்களுக்காக பரிந்து பேசிக் கொண்டிருக் கிறார். நீங்கள் ஒளியில் நடந்தால் உங்கள் செயல்களை வெளிச்சத்தில் கொண்டு வருவார். அப்போது அவைகள் தேவனுக் குள்ளாய் செய்யப்படுகிறதா என்று கண்டறியப்படும் யோவா.3:21. அவருடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம் எல்லாப் பாவங் களிலுமிருந்து விலக்கி கழுகி பாது காக்கும். நீங்கள் அவரோடுள்ள ஆசீர்வாத மான உறவில் நடப்பீர்கள்.

"அல்லாமலும் நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர்" எபிரே. 10:23.

"நாம் உண்மையில்லாதவர்களா யிருந்தாலும், அவர் உண்மையுள்ளவரா யிருக்கிறார். அவர் தம்மைத் தாம் மறுதலிக்கமாட்டார்" 2 தீமோ.2:13.

வேதவசனத்தை வாசிப்பதும் ஜெபிப்பதும் இணைந்து செல்லக் கூடியவை. ஒன்றை நாம் உத்தமமாகச் செய்யும் போது அடுத்ததும் தானாக இணைந்து வரும்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு :

- அவரது வார்த்தையாகிய **வேத** வாக்கியங்களை வாசிக்க சமயம் செலவிடாவிட்டால் கிறிஸ்துவை நேசிப்பதாக ஒருவர் கூற முடியுமா?
- ஒரு விசுவாசி **புதிய ஏற்பாட்டினை** வருடம் ஒரு முறையாவது படிக்க வேண்டும்.
- ஒருவர் ஒவ்வொரு வார நாட்களிலும் மூன்று அதிகாரங்களும் ஞாயிற்றுக் கிழமை ஐந்து அதிகாரமும் படித்து வந்தால் ஒரு வருடத்திற்குள்ளாக **வேதாகமம்** முழுவதையும் ஒரு முறை படித்து முடிக்கலாம்.
- நமது சொந்த வழிகளும் நினைவுகளும் முட்களையும் காஞ்சொறி களையும் போன்றவை. அவை பலன் தராது. அவற்றால் நமக்கு எந்த உதவியுமில்லை. ஆனால் அவை **தேவ** வசனத்தால் இடப்பெயர்ச்சி அடையும் போது முட்களுக்கும் காஞ்சொறிக்கும் பதிலாக தேவதாரு விருட்சமும் மிருதுச் செடியும் வளரும்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason